(*b*) The question at what rates the assessments have to be collected in areas in Pudukkottai Division involved a very detailed examination and the Government were able to issue orders in the matter only in April 1967. After the receipt of Government orders, the District Revenue Officer, Tiruchirappalli has issued instructions to the Tahsildars to prepare accounts for Fasilis 1375 and 1376.

(*c*) & (*d*) No. In certain villages there were disputes between' the in Inamdars and the ryots only in regard to the sharing of the produce both claiming that they were entitled to ryotwari patta. Such disputes were amicably settled and no case is reported to have been taken to the Court.

தென் ஆற்காடு மாவட்டத்தில் நெல் கொள்முதல்

*375 வின.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967 ஜனவரி, பிப்ரவரி, மார்ச், எப்ரல் முதலிய நான்கு மாதங்களில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் ரகங்கள் யாவை ?

(இ) எவ்வளவு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன ?

(உ) கோவாப்பரேடிவ் சொஸைட்டி மூலம் எவ்வளவு ?

(எ) சர்க்கார் கொள்முதல் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) 1967 ஜனவரி, பிப்ரவரி மார்ச், எப்ரல் திங்கள்களில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில், கீழ்க்கண்ட நெல் ரகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன :—

(1) செங்கற்பட்டு சிறுமணி (கே. 19).
(2) கார்த்திகைச் சம்பா.
(3) குதிரைவால்.
(4) வேழம்கொண்டான்.
(5) ஒட்டுக் கிச்சடி.
(6) கருடன் சம்பா.

(இ) 8,40,820 மூட்டைகள் (ஒவ்வொரு மூட்டையும் 75 கிலோ கிராம் கொண்டது) அல்லது 42,041 டன் அரிசி.

(உ) 99,440 மூட்டைகள் (ஒவ்வொரு மூட்டையும் 75 கிலோகிராம் கொண்டது) அல்லது 4,972 டன் அரிசி.

(எ) 7,41,380 மூட்டைகள் (ஒவ்வொரு மூட்டையும் 75 கிலோகிராம் கொண்டது) அல்லது 37,069 டன் அரிசி.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுகாவில் மட்டும் எவ்வளவு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, கடந்த அரசாங்கத்தினால் கொள்முதல் செய்யப்பட்டதிலே நஷ்டம் வந்ததாகக் கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் கொள்முதலுக்காக வருகிற அதிகாரிகள் சரியாகப் பொருள்களைப் பார்க்காமல் ஈரத்தையும் மணலையும் கலந்திருந்த பொருள்களை, சர்க்கார் பொருள்தானே என்ற அசிரத்தையின் காரணமாகக் கொள்முதல் செய்ததால் பெருவாரியாக நஷ்டம் ஏற்பட்டது என்று கணக்குக் காண்பித்திருக்கிறது. இப்போது சர்க்காருக்

காகக் கொள்முதல் செய்யும்போது முறையாகக் காயவைத்த நெல்லைக் கொள்முதல் செய்வார்களா? அப்படி நஷ்டம் வந்தால் அந்த நஷ்ட ஈட்டைக் கொள்முதல் செய்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து வசூலிக்க உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கொள்முதல் விஷயங்களில் சரியாக நடந்துகொள்ளவும், முறைப்படி உலர்ந்த நெல்லைக் கொள்முதல் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகளை அவ்வப்பொழுது சர்க்கார் எடுத்து வருகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 8 லட்சத்து 40 ஆயிரம் மூட்டைகள் கொள்முதல் செய்ததாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். அந்த மாவட்டத்தில் எத்தனை மூட்டை கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எந்த அளவுக்குக் கொள் முதல் செய்ய வேண்டுமென்ற நிலையில், 40 ஆயிரம் டன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று குறியீடும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்முதல் வெற்றிகரமாகவும், நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக நண்பர் சிவசுப்பிரமணியன் அவர்களுடைய சிதம்பரம் தாலுகாவிலிருந்து பெருமளவுக்குக் கொள்முதலாகியிருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தின் குறியீட்டை எட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: சார், இப்போது பெரும்பாலும் நெல் கொள்முதல் களத்து மேடுகளில்தான் நடக்கிறது. அந்த நெல் காயாமல் இருக்கும்போதே அதிகாரிகள் கொள்முதல் செய்துகொண்டு போய்விடுகிறுர்கள். அந்த நெல்லை ஈரமாக இருக்கும்போதே அவியலில் போடும் போது அரிசி அவ்வளவு நன்றுக இருப்பதில்லை. ஆகவே, அதிகாரிகள் வந்து காயப்போட்ட நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்பது சரியானதாக இருக்கும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி தென் ஆர்க்காடு மாவட்டத்தை ஒட்டியதா? மூல வினுவையொட்டி, 'தென் ஆர்க்காடு மாவட்டத்திலா'?

திரு. கரு. சீமைச்சாமி: இப்படி நெல் கொள்முதல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினர் சொல்லுகிற கூற்று, வியாதி வந்துவிட்டதென்றுல் ஆளையே கொன்றுவிடுங்கள் என்று சொல்லுவது போல் இருக்கிறது.

தவிடு, பிண்ணுக்கு ஏற்றுமதி

*376 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தவிடு, பிண்ணுக்கு நமது மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதி ஆகிறது?

(இ) 1957 முதல் 1966 வரை வருட வாரியாக எவ்வளவு ஏற்றுமதி ஆகிறது?

(உ) ஏனைய மாநிலங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறதா? எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) முதல் (உ) வரை சபை முன் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

---

[a] 563—564-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.